பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

26

MODERN BRIGHTON
Science Academy
VADDUKODDAI
சனி, ஞாயிறு வகுப்புகள்
(புதிய பிரிவு)
Year 9, 10, 11
விஞ்ஞானம்
J. R. சூரி
கணிதம்
தளையராணம்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை
ரூ. 2 00

MODERN BRIGHTON
Science Academy
VADDUKODDI
G. C. E (A/L, 89
இரசாயனவியல்
(அசேதன இரசாயனம்)
J. S. R. பக்லி
ஆரம்பம்: 02 6.88
THU - 4 30P M
பௌதிகவியல்
(வெப்பவியல் இயக்கவியல்)
ஆரம்பம்:- 3 06 88
Fri. 5.30 PM
S M R சத்தியசீலன்

ஏடு 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ வைகாசி மீ 21 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 17 (03 6 988 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:96

## தமிழகத்திலிருந்து உடனடியாக

# ஈழத்துப் போராளிகள் வெளியேற்றப்படுவர்

### இளைஞர்களை தேடிக் கண்டு பிடிக்கும் பணி தீவிரமடைந்து வருகிறது

கொழும்பு, ஜூன் 3

தமிழகத்தில் தங்கியிருக்கும், ஈழத்தமிழ்ப் போராளிகளை அங்கிருந்து முற்றாக உடனடியாக வெளியேற்றுவதற்கு தமிழ்நாடு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியவருகிறது.

அரசின் குடிவரவு குடியகல்வுப்பகுதி அதிகாரிகளும் பொலீஸாரும் தமது தீவிரதேடுதல், மற்றும் வெளியேற்றுதல் நடவடிக்கைகளை மீண்டும் முடுக்கிவிட்டிருக்கிறார்கள் என்று அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் தங்கி இருக்கும் சகல போராளிகள் அமைப்பைச் சேர்ந்த இளைஞர்களையும் உடன் வெளியேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது

இது தொடர்பாக தமிழ்நாட்டுப் பொலீஸாரும், குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினரும் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

உங்களுடைய நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்துக்கு வாராந்தம் கப்பல் சேவையும் நடைபெறுகிறது. எனவே நீங்கள் அங்கு போய்ச் சேரலாம் — என்று போராளிகள் குழுக்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனராம்.

இதேவேளை அகதி முகாம்களிலும், வேறு அலுவலகங்களிலும் பெயர்களைப் பதிந்துவிட்டு வெளியே தலைமறைவாக இருக்கும் இளைஞர்களையும் தேடிக் கண்டுபிடித்து விட வேண்டும் என்பதில் பொலீஸார் துடியாய் துடித்துச் செயற்படுகிறார்களாம்.

ஈழத் தமிழ் இளைஞர்கள் தங்கி இருக்கும் வீடுகளுக்குச் சென்று இளைஞர்களைக் குறிப்பிட்ட திகதிகளில் கப்பலுக்குச் செல்லுமாறும், அப்படி செல்லாதவிடத்து கைது செய்யப்படுவர் என அதிகாரிகள் எச்சரித்து

( 6ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### ● இப்படியும் பயமுறுத்தல்

கொழும்பு, ஜூன் 3

மேற்கு மாகாண சபைத் தேர்தலை முன்விட்டு கொழும்பு செட்டியார்தெரு நகைக்கடை உரிமையாளர்களுக்கு பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

மாகாணசபைத் தேர்தலில் செல்லச்சாமி தெரிவானால் செட்டியார் தெருக் கடைகள் தாக்கப்படும் என்பதே அந்தப் பயமுறுத்தல் ஆகும்

இ.தொ.கா பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி மேற்கு மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. க. வுடன் இணைந்து போட்டியிட்டது தெரிந்ததே. (இ-3)

### விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 3

அல்லைப்பிட்டியில் நடைபெற்ற வான்-மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் எஸ்.பஞ்சாட்சரம் என்பவர் பலியானார்.

இவருடன் சென்ற மூன்று பிள்ளைகளும் இவ் விபத்தில் காயமடைந்தனர்.

புதன்கிழமை இரவு அல்லைப்பிட்டிச் சந்தியில் இச் சம்பவம் நடைபெற்றது.

விபத்துக்கு உள்ளான வான் யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாகவும் மோட்டார்சைக்கிள் அல்லைப்பிட்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்ததாகவும் தெரியவருகிறது. (ஒ10)

### வேட்பாளர் மாரடைப்பால் மரணம்

கொழும்பு ஜூன் 3

மேற்குமாகாணசபைத் தேர்தலில் ஐக்கியசோஷலிச அணியின் சார்பில் போட்டியிடவிருந்த வேட்பாளரான அன்ரன் அமரசேகரா கடந்த செவ்வாய் மாரடைப்பினால் இறந்தார் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### சுபநேரம்

3—6—1988
வைகாசி 21
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
5 52 முதல் 7.22 வரை
ராகுகாலம்:
10 22 முதல் 11 52வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திரு இருதயத்திருவிழா

## பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 7 பேர்

வடமராட்சி, ஜூன் 3

அமைதிப் படையினர் தம்மைத் தாக்கியதாகக் கூறி, வடமராட்சியின் பல பகுதிகளில் இருந்தும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நேற்றுச் சிகிச்சை பெற பலர் வந்தனர்

அவ்வாறு வந்தவர்களில் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டவர்களில் எழுவரின் பெயர் விவரம் வருமாறு:—

முருகுப்பிள்ளை- ஏகாம்பரநாதன் (வயது 31) மாதனை. பருத்தித்துறை கனகரத்தினம்- சதீஸ்குமார் [வயது 19] சந்தாதோட்டம். புலோலி— பா. மரிய அருள்நாயகம் [வயது 36] பருத்தித்துறை.

கே செல்லமாணிக்கம் [வயது 40] பருத்தித்துறை பி தேவராசா (வயது 40] பருத்தித்துறை— ஸ்ரீ ரவீந்திரராசா (வயது 23) பருத்தித்துறை— இராமலிங்கம், பாஸ்கரன் (வயது-21) புலோலி.

(ஒ-160)

## வடபகுதிக்கு மின்சாரம் துண்டிப்பு; நாசவேலையே காரணமாம்

### மீண்டும் கிடைக்க சில தினங்களாகலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடபகுதிக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதற்கு நாசகார வேலையேகாரணம் என்று அறியவந்துள்ளது மீண்டும் வடபகுதிக்கு மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட இரண்டு அல்லது மூன்று நாட்கள் தேவைப்படலாம்.

இவ்வாறு வடபகுதி மின்சார விநியோகத்திற்குப் பொறுப்பான உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

வடபகுதிக்கு மின் விநியோகத்தை வழங்கும் பிரதான மின்நிலையம் ஒன்று அனுராதபுரத்தில் உள்ள கஹதாவ என்னுமிடத்தில் அமைந்துள்ளது. அந்த மின்நிலையத்திலிருந்து வடபகுதிக்குத் தூண்கள் மூலம் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விநியோகப் பாதையிலுள்ள 123 கிலோவாட்ஸ் மின் விநியோக உப மின்நிலையம் கஹதாவவுக்கும், ஹபரணவுக்கும் இடையே உள்ள காட்டுப்பகுதியில் உள்ளது அந்த உப மின் நிலையம் கடந்த புதன் கிழமை விஷமிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது

இந்த நாசவேலை காரணமாகவே வடக்கில் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது எனினும் இந்த மின்சாரத் தடைக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ள அதிக நேரம் தேவையில்லை.

ஆனால் தற்பொழுது

[6 ஆம் பக்கம் பார்க்க)

### சூட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 3

கச்சேரி-நல்லூர் வீதியில் உள்ள தொழிற்கூடம் ஒன்றின் உரிமையாளர் புதன்கிழமை இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

க நடராசா [வயது48] என்பவரே சுடப்பட்டவராவர்.

இவரது சடலம் நேற்று யாழ்— ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது (ஒ—10)

முச்சந்தி முரளி



என்னத்தைச் சொன்னாலும் செய்தாலும் மாகாணசபைத் தேர்தலை நடத்திப் போட்டேன் எண்டு விருப்புப் பேசுவினம் இனி...!

## பிரதம தபாலகத்திற்கு மேலும் 4 தொலைபேசிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ் பிரதம தபாலகத்திற்கு மேலும் நான்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்க ஒழுங்கு செய்வதாக இந்திய அமைதிப்படையின் யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோன் உறுதி வழங்கியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ் பிரதம தபாலகத்திற்கு வருகை தந்த பிரிகேடியர் காலோன் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தொலைத் தொடர்புச் சேவையைப் பார்வையிட்டார்.

அவ்வேளையில் அங்கு அதிக எண்ணிக்கையான மக்கள் தொலைபேசித் தொடர்புக்காக காத்திருப்பதைக் கண்ட பிரிகேடியர் மேலும் நான்கு தொலைபேசித் தொடர்புகளை வழங்க வெகு விரைவில் ஆவன செய்வதாக உறுதியளித்தார்

மேலும் தபால் நிலையத்தின் வசதியீனங்கள் பற்றியும் வினவிய அவர் விரைவில் குறைகளைப் போக்குவதற்கு ஆவன செய்ய உறுதியளித்தார்.

யாழ் பிரதம நிலையத்திற்கு தற்பொழுது ஒரு தொலைபேசி இணைப்பே வழங்கப்பட்டிருக்கிறது (ஒ-10-9)

## வடமராட்சி ஊரடங்கு

### நேற்றுப் பிற்பகலில் நீக்கம்

#### பல இடங்களில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடமராட்சிப் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் சுமார் இரண்டு மணியில் இருந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் நீக்கப்பட்டது.

ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் வடமராட்சியின் பல பகுதிகளிலும் - குறிப்பாக 'கிரனேட்' வீச்சுச் சம்பவம் இடம்பெற்ற பருத்தித்துறை சிவன் கோவிலடிப் பகுதியில் - சுற்றிவளைப்பும் தேடுதலும் தீவிரமாக நடைபெற்றன.

இந்த நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் பலரும் இம்சைப்படுத்தப்பட்டதாக பொதுவாக புகார் தெரிவிக்கப்பட்டது.

புலோலி மக்கள் வங்கிக்கு வந்திருந்த வாடிக்கையாளர்கள் புதன்கிழமை முற்பகலில் வெளியே செல்லவிடாது அமைதிப்படையினரால் தடுக்கப்பட்டனர்.

அவர்கள் நேற்று ஊரடங்கு தளர்த்தப்படும் வரைதொடர்ந்துதடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில முன்னாள் அரசியல் பிரமுகர் ஒருவரும் அடங்குவார்.

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள நகரசபைக் காரியாலயத்திலும் பலர் நீண்டநேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அப்போது அமைதிப்படை ஜவான்கள் ஆக்ரோஷத்துடன் நடந்துகொண்டதாகப் புகார்கூறப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் போக்குவரத்துச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் அச்சம் காரணமாக சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

இதேவேளை வடமராட்சிக்கு அழைக்கப்பட்டிருந்த மேலதிக இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் வாபஸ் பெறப்பட்டனர்.

இவர்கள் வல்லைவெளி, முள்ளிவெளி ஆகியவற்றினூடாக நேற்றுப் பிற்பகல திரும்பிச் சென்றனர் (ஒ-க-160)

கிம்புலுப்பிட்டியாவில்

## 'ஹெலி' விபத்து

### அதிகாரி ஒருவர் பலி

கொழும்பு, ஜூன் 3

கட்டுநாயகவுக்கு அருகில் கிம்புலுப்பிட்டியாவில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானது.

விபத்தில் லால் ஆரியதிலக என்ற அதிகாரி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். விமானமோட்டியான குமாரணதுங்க பலத்த காயமடைந்தார்.

அச்சமயம் ஹெலிக்கொப்டரில் இருந்த ஆறு வீரர்கள் உயிர் தப்பினர்.

புதன்கிழமை இரவு 9-50 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றது

விபத்துக்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

வழமையான ரோந்தில் ஈடுபட்ட போது டெலிகம்பியில் மோதியதால் இந்த விபத்து சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### மீண்டும பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 3

கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணம்-முத்தையன்கட்டு பஸ்சேவை மீண்டும் ஆரம்பமகியுள்ளது

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையே இந்தச் சேவையை நடத்த தொடங்கியுள்ளது.

இந்தச் சேவையானது தினமும் காலை 6.45 மணிக்கு யாழ் நகரில் இருந்து புறப்பட்டு முத்தையன்கட்டை அடையும்

மீண்டும் 12 45 இக்கு முத்தையன்கட்டிலிருந்து இப்பஸ் புறப்படும் (ஒ-9)

## ★கொழும்பில் நேற்றும் வன்செயல்கள்

# வாக்களிப்பு நிலையங்கள் மீது தாக்கு

### குறைந்த எண்ணிக்கையினரே வாக்களித்தனர்

கொழும்பு, ஜூன் 3

மேல் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் புதன்கிழமை பெரும் குழப்பங்கள் நடைபெற்ற போதிலும் நேற்று, திட்டமிட்டபடி மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்றன

எனினும் மிகக்குறைந்த எண்ணிக்கையினரே வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்றும் வன்செயல்கள் தொடர்ந்தன, பல வாக்களிப்பு நிலையங்கள் தாக்கப்பட்டன. அரச உடைமைகள் தீயிட்டு நாசம் செய்யப்பட்டன. பொலீஸார் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

நேற்று நடந்த தேர்தல்களில், கொழும்பு நகரிலும் நுவரெலியாவிலும 50 முதல் 60 சதவீதமானோர் வாக்களித்தனர் —என்று தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்கு, மத்திய மாகாணங்களில் ஏனைய இடங்களில் 30 முதல் 40 சதவீதமானோரே வாக்களித்தனரென்று தெரிவிக்கப்பட்டது.

மாதகலையில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் இனந்தெரியாதோர் நேற்று அதிகாலை புகுந்து பொலீஸார் மீது சுட்டனர். எவரும் காயம் அடையவில்லை.

பொலீஸாரிடமிருந்து துப்பாக்கிகளை அக் கோஷ்டியினர் கைப்பற்றியதுடன், வாக்களிப்பு நிலையத்தை எரித்துவிட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

Love Birds சகலவிதமான நிறமும் விற்பனைக்குஉண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 272, (புதியஇல.352) நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3423)

சகலவிதமான T. V. பூஸ்ரர், அன்ரனு வயர், றேடியோ, றேடியோ உதிரிப்பாகங்கள் கைக்கடிகாரங்கள், சுவர்கடிகாரங்கள், மின்விசிறிகள் சைனு மின் அடுப்புகள் T. V. ஸ்ராண்ட் எவர்சில்வர் பொருட்கள் றைஸ்குக்கர் எலெக்றிக் கேற்றில்களும் கரம்போட், விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் ரவலிங் பாக்ஸ், பாடசாலைபாக்ஸ் வாங்குவதற்கு நாடுங்கள். New City Traders 135, Kasturiar Road, Jaffna (C 5299)

சடைத் தளபாடங்கள் அலுமாரிகள் மேசைகள் விற்பனைக்கு உண்டு 349/73 பருத்தித்துறை வீதி. நல்லூர் யாழ்ப்பாணம் (3446)

புதிய நிலையில் உள்ள அவரி (Avery) 5 அந்தர் தராசு படிசெற்றுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரைக்ஸ், பலாலி வீதி.திருநெல்வேலிசந்தி (4157)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. [Broilers] தொடர்பு 211. கச்சேரி நல்லூர் றோட் [4152]

-5n E V. மொடல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் S பரந்தாமன் இந்துக் கல்லூரி வளவு உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (4097)

சகல ரெலிவிஷன் ரியூப் Fly Back ரியூனர் மற்றும் உதிரிப்பாகங்கள் சகல நஷனல் வீடியோ டெக், செட் R F Converter, மற்றைய உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (ரெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். (4082)

விற்பனைக்கு- பாவித்த சகல வீட்டுத் தளபாடங்கள் T. V கசற் றேடியோ ஹோல் செற் சிறிய பெரிய அலுமாரிகள் காரியாலய மேசை சாப்பாட்டு மேசை கதிரைகள் Show case கண்ணாடி மேசை மற்றும் பலவித பொருட்களும் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு M. தியாகராஜன் 326 பிரதான வீதி யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் சந்திக்கருகாமை (3411)

### காணி விற்பனை

ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமையில் குளப்பிட்டி றோட்டில் (ஆலடி வைரவர் கோவிலடி) 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு கடிதம் மூலமாகவோ, நேரிலோ தொடர்புகொள்ளலாம் நேரில் தொடர்பு கொள்பவர்கள் வெள்ளி சனி, ஞாயிறு பிற்பகல் 1மணிக்கும்—5 மணிக்கும்) சந்திக்கவும் தொடர்பு: இல. 46. செட்டியார் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் கடிதமூலம் பெண்ணின் திருமதி சிவலோகேஸ்வரன், சிவபதி இல்லம்' மந்துவில், மகேடிகாமம். (4083)

### சோதிடம்

விற்பனையாகிறது 20-6-88இல் வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி? V. A சிவராசா, சோதிடர், வேலணை (4098)

## தேவை

யாழ்நகரில் பிரபல்யமான ஸ்தாபனத்திற்கு காசாளர் தேவை ரூபா 3000/- முற்பணம் கட்டக்கூடியவரும், யாழ் மாநகர எல்லைக்குள் இருப்பவரும் விரும்பப்படுவர், 4 ஆம் 5 ஆம் திகதிகளில் நேரில் வரவும். இல 44, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [4158]

### மணப் பெண்கள் தேவை

யாழ் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவவேளாள குலத்தைச் சேர்ந்த 32 வயதையுடைய M B. B. S. Doctor U. Kயில் தொழில் புரிபவருக்கும் 31 வயதுடைய M B A தரமுடைய U S. Aயில் தொழில் புரிபவருக்கும், Doctor, Accountant B Sc, Computer படித்த பெண்கள் விரும்பத்தக்கது குறிப்பு மற்றும் விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சாயி பங்களா 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (4153)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், [புரொயிலர் குஞ்சுகள் ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு] 3ம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரப்படி லேன் கொக்குவில் (4100)

### புதிய நூல் விற்பனை

தேசிய வருமானம்:- ஆக்கம்: மா. சின்னத்தம்பி, B A, B. Phil [Hons] [வலய ஆலோசக ஆசிரியர்] புதிய பாடத்திட்டக் கணக்குகளை உள்ளடக்கியது விலை ரூபா 20/- பாடசாலைகளுக்கும், தொகைக் கொள்வனவாளர்கட்கும் விசேட கழிவுண்டு. விபரங்கட்கு ''மகாலஷ்மி'' அம்மன் கோவில் மேற்கு ஒழுங்கை, சுதுமலை, மானிப்பாய். [4078]

### WININN LADIES

இல்லத்தரசிகளே நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த பனையியல் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் Wininn Ladies Academy 61/1 பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 3442)

### தவறிவிட்டன

இரத்தினவேலு சிவகுமார் என்பவர் பெயருடைய எனது அடையாள அட்டையும் பணம் 400 ரூபாவும் மோட்டார் சயிக்கிள் பாஸ்சும், ஆனைக்கோட்டை யாழ்ப்பாண வீதியில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள், தயவு செய்து மனமிரங்கி M. அப்புலிங்கம் 977/1, கே. கே. எஸ் வீதி, அரசடி பிள்ளையார் கோவிலடி மேற்கு வீதி. அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [4156]

யோகராசா சேசுமேஸ்வரி என்பவருடைய எனது அடையாள அட்டை இல 638042282 V கன்னாகத்திற்கும் குரும்பசிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (4155)

## சேவை

40 வயதுடைய செவ்வாய் குற்றமற்றவரும், தாரமிழந்தவருமான விஸ்வகர்ம குலத்தைச் சேர்ந்தவருக்கும் 31 வயதுடைய பாங்கில் வேலை செய்பவருக்கும் 2 இல் செவ்வாயுடைய 40 வயதான பாங்கில் (Staff Officer) ஒருவருக்கும், இரண்டு உத்தோகப் பெண் டாக்டர்களுக்கும், தகுந்த மணமகன், மணமகள்தேவை. காணி வீடு விற்க அல்லது வாங்குவதற்கு விரும்புவர்களும் நாடவேண்டியது மாங்கல்யா ஸ்தாபனம் 81/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (4093)

### தவறிவிட்டது

கதிரவேலு தம்பேஸ்வரி மத்துக்காமம் என்னும் பெயர், விலாசத்தையுடைய எனது அடையாள அட்டை இல: 466380504V யாழ். பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (C5291)

636153168V இலக்கமுடையதும் நூபா குணரத்தினம் என்ற பெயருடையதும் 288, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம் என்ற விலாசம்உடையதுமான அடையாள அட்டை தவறி விட்டது கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [3447]

### சிறந்த தேயிலை

சில்லறையாகவும், மொத்தமாகவும் அதி உன்னத சுவை அதிக சுயம் கொண்ட தேயிலை விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு கூடிய சலுகை கொடுக்கப்படும் 250g 100g 50gr, பக்கெட்டுகளிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சல்வயல் வீதி, நுணுவில்கிழக்கு,சாவகச்சேரி கண்டிவீதியிலிருந்து 200 யார் தொலைவில் உள்ளது. (4154)

## வகுப்புகள்

Radio - T V Air Conditioning, Rafigeration வயறிங் வெல்டிங் பிளம்பிங் மோட்டார் மெக்கானிசம் Typing Spokon English குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் சிறந்த செய்முறை பயிற்சியுடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சான்றிதழ் பெறுமதியானது Vispa Engineering Aid Hall 328 நாவலர் வீதி (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் (3420)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் எந்த வியாபாரமும் செய்ய கூடிய சகல வசதிகளும் கொண்ட இரண்டு மேல் மாடிகள் உடனடியாக வாடகைக்கு விடப்படும். தேவையானோர்கள் 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். [4091]


# Mack Travels
# விமான சேவை

மீண்டும் யாழ் மக்கள் வேண்டுகோளுக்கிணங்க

★ யாழ் - கொழும்பு விமான சேவை தினசரி ஒழுங்காக, துரிதமாக குறைந்த கட்டணத்தில் செயல்படுகின்றன.

★ ஏமாற்றத்தைத் தவிர்க்க ஆசனங்களை ஒரு கிழமைக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

★ ஒவ்வொரு பிரயாணிகளும் ஐந்து லட்சம் ரூபாய்க்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்கள்.

★ உலகில் எந்த நாட்டிற்கும் டிக்கற் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

★ அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்கள் உங்கள் தேவையை பூர்த்தி செய்வார்கள்.

இல. 8, முதலாம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(C 5290)


## சுவிஸ் ஓம் திட்டம்

[Swiss Aum Project]

இத்திட்டம் தனது முதலாவது ஆண்டு விழாவை பசல் நகரில் (Basel) ஊவா பைசார் (Uva Beissert) உதவியுடன் 12-6-88இல் கொண்டாடுகிறது அன்றைய நிகழ்ச்சியில் யூரோப் தமிழ் இசைப்புகழ் இராசையா சுந்தரலிங்கம் அவர்கள் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்துவார். சுவிஸ் ஓம் திட்டம் இலங்கை அகதிகள் சுவிற்சலாந்திலும், ஜேர்மனியிலும் இருப்போர் ஊக்கமாகும் இத்திட்டம் இலங்கை வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் அகதிகளுக்கு உதவும் முயற்சியாகும் இத்திட்டத்திற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ஊவா பைசார் பெரும் உதவி புரிகின்றார். இத்திட்டத்தின் இயக்குநராக C. விவேகானந்தா, N. U. மூர்த்தி, G. இரட்ணம் ஆகிய மூவரும் ஊவா பைசாரின் [Uva-Beissert] உதவியுடன் செயற்படுகிறார்கள்.

வருகின்ற 12-6-88இல் பசல் நகரமே தமிழ் மணம் கமழ விழாக்கொண்டாட ஆயத்தமாகிறார்கள் என்பதை அறியத்தருகிறோம்.

[4024]

### அங்குரார்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 3 ''விழிப்புல வலுவிழந்தோர்வாழ்வகம்'' என்ற நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கான பேரவைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்துக்கு தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. சி. சிவமகாராசா தலைமை வகிப்பார்.

(ஒ-10)


# ஈழம் வாழ் மக்களுக்கு ஓர் அருட்செய்தி !!

சென்னை மவுண்ட் றோட் புதிய ஜெமினி கொம்பிளக்ஸில் அமைந்துள்ள சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் நிறுவனத்தார் யாழ் மக்களின் நன்மை கருதி இப்போது இல: 24/1 இல் சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் கிளை ஸ்தாபனத்தை அமைத்துள்ளார்கள்.

● சத்திய சாயிபாபாவின் நேரடித்தரிசனம் காண விரும்புகிறீர்களா?

புனித ஸ்தல யாத்திரையுடன் சத்திய சாயிபாபாவின் நேரடித்தரிசனமும் ஆசிர்வாதமும் பெற்றபின், பின் வரும் புனித ஸ்தலங்களையும் தரிசிப்பதற்கும், அரிய சந்தர்ப்பம் அளிக்கிறார்கள்.

சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

சிதம்பரம் சீர்காழி, குற்றாலம், திருச்செந்தூர், திருத்தணிகை, திருப்பரம் குன்றம், சுவாமிமலை, பழனி, பழமுதிர்ச்சோலை, மதுரை மீனாட்சி அம்மன் கோவில், காஞ்சி காமாட்சி அம்மன் கோவில், திருப்பதி திருச்சிஉச்சிப்பிள்ளையார் கோவில்,மற்றும் ஊட்டி,கொடைக்கானல் அழகிய மைசூர், பிருந்தாவனம் உட்பட மற்றும் பல சுற்றுலா இடங்களுக்கும் அழைத்து செல்லப்படும்.

விசேட குறிப்பு:
அகஸ்தியர் காண்டம் வாசிக்கும் பிரபல சோதிடரைச் சந்திக்கும் வாய்ப்பினையும் நாம் ஏற்படுத்திக் கொடுப்போம்.

சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்
இல: 24/1 பெரியகடை வீதி,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:

# சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

இல: 33, 1-ம் மாடியில்
ஜெமினி ஸ்ருடியோ புதிய ஜெமினிகொம்பிளக்ஸ்
602, மவுண்றோட், சென்னை 60006.
தமிழ்நாடு. தொலைபேசி: 475382.
(C. 5297)



# M-3 TRAVELS

அளிக்கும்

## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்
## மத்திய கிழக்கு
# ★ வேலைவாய்ப்பு ★

ஆண்களுக்கு:

### ★ சவூதி அரேபியா

(1) Cobbler's (சப்பாத்து தைப்பவர்கள்)
சம்பளம் 900 S- R (7500/-)

21 வயதுக்கு மேற்பட்டோர் தொடர்பு கொள்ளலாம். இருப்பிட, உணவு, வைத்திய வசதிகள் முற்றிலும் இலவசம்.

[2] கனரக வாகன சாரதிகள்
சம்பளம் 650+100 S. R
(3) Spray Labourer's [ஸ்பிறே கூலியாட்கள்]
(4) Railway Labourer's [புகையிரத கூலியாட்கள்]
(5) Supervisor's (மேற்பார்வையாளர்கள்)
மேற்பார்வையாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை 15-6-88இல் நடைபெறும்.
(6) Cleaner's (சுத்தம் செய்பவர்கள்)

### ★ டுபாய்

(1) Tinker's (தகர வேலையாட்கள்)
[2] Spray Painter's (Car)
[3] மோட்டர், டீசல், மெக்கானிக்
சம்பளம் 700 திரும் (6300/-)

பெண்களுக்கு:

### ✳ டுபாய்

Lady Tailor's [தையல்காரப் பெண்கள்]
சம்பளம் 200 அமெரிக்கன் டொலர்ஸ்

★ சவூதி குவைத், பாறின், டுபாய், மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்கள் உடன் தேவை. சிங்கப்பூருக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக செல்ல விரும்புகிறவருக்கு ஆங்கில அறிவு அவசியம்.

★ கடவுச்சீட்டு, Bond முதலியன செய்து கொடுக்கப்படும்.
★ பிரயாணம் செய்ய விரும்புகிறவர்கள் கடவுச் சீட்டுடனும் கடவுச் சீட்டு முன்பக்கப் போட்டோப் பிரதியுடனும், 10 படங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.
★ பெண்கள் மேற் குறிப்பிட்டவைகளுடன் முழு அளவிலான கலர்ப் படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் பிரயாணம் இனிதே நிறைவேற
இன்றே நாடுங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் இதுவே

T. இந்திரநாதன்
# M-3 TRAVELS
College Road, Sothy Lane,
Kankesanturai.
(பஸ் வழி இலக்கம்:- 769)

96, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

● சவூதி பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டு விட்டது: கொழும்பு பிரயாணம் 4-6-88, சவூதி பிரயாணம் 7-6-88 சவூதிக்கு Passport தந்தவர்கள் உடனடியாக எனது காங்கேசன்துறை விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

[C-5259]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே வெளிநாடு செல்ல வேண்டுமா?

ஓர் அரிய சந்தர்ப்பம்

உடனே தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Rainbow Travels & Manpower**

முத்துராஜா ஏஜென்சி
29, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு A. சூரியகுமார் (பாபு)
திரு. V. முத்துராஜா,

● **KUWAIT**
[வயது எல்லை: 20 - 40]

(A) Labourers - 55 K. D
[கட்டிடப்பகுதி]

(B) Cleaners - 35 K. D

(C) Drivers L/V - 60 K. D
H/V - 70 K. D

GULF சாரதிப்பத்திரம் உள்ளவர்கள்மட்டும்.

பிரயாணம் செய்ய விரும்புவோர் கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களுடன் நேரில் வரவும்.
(i) கடவுச்சீட்டு (செல்லுபடியான)
(ii) 5 P P. SIZE போட்டோக்கள்.
(iii) 3 கடவுச்சீட்டின் போட்டோ பிரதிகள்.

● இரண்டு மாதத்துக்குள் உடனடிப் பிரயாணம்.

(D) Fitters. Welders, Plumbers, Fabricators } 65 K D

இவர்களது பிரயாண ஒழுங்குகள் 3 மாதங்களுக்குள் செய்து தரப்படும்.

[3416]


# பயன்படுத்த முடியாத நிலையில் 15 வகுப்பறைகள்

## யாழ் மத்திய கல்லூரியின் நிலை குறித்து அதிபர் கவலை

யாழ்ப்பாணம் ஜூன் 3
1985 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் யாழ் மத்திய கல்லூரியின் பதினைந்து வகுப்பறைகள் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. இதனால் மாணவர்கள் மரநிழல்களிலும் உணவு விடுதிகளிலும் கல்வி பயில்கிறார்கள்.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு வி. பாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளிலேயே 152 வருட தொன்மை வாய்ந்த வரலாறுடைய கல்லூரி யாழ் மத்திய கல்லூரி ஆகும்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் இங்கு கல்வி கற்கிறார்கள்.

பல மாடிக் கட்டடங்களையும், அழகிய விளையாட்டு மைதானத்தையும் இக்கல்லூரி தன்னகத்தே கொண்டுள்ளது.

இக்கல்லூரி யாழ் கோட்டை இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்துள்ள காரணத்தினால் பலமுறை 'ஷெல்' தாக்குதல்களுக்கு உள்ளானது கட்டடங்களும் பெரும் சேதத்துக்கு உள்ளாகின.

பாதிக்கப்பட்ட கட்டடங்களை திருத்தித் தருவோம் என்று இந்திய அமைதிப்படையினர் நான்கு முறை உறுதி கூறியிருந்தனர். இன்று வரை திருத்தித் தரப்பட வில்லை. ஆ[illegible]ங்கை வானொலி யாழ் மத்திய கல்லூரி திருத்த வேலைகள் முடிவடைந்து புதுப் பொலிவுடன் காட்சியளிப்பதாக அறிவித்தது. நான் உடன் மறுப்பு அறிக்கை அனுப்பினேன்.

அரசாங்கமோ, அரச சார்பற்ற பொது நிறுவனங்களோ எமது பக்கம் தமது பார்வையை திருப்ப தயக்கம் காட்டுகின்றன.

இப்படி அதிபர் கூறினார்.

கல்லூரி ஆசிரியர் ஒருவர் தகவல் தருகையில் "தற்பொழுது மிகவும் அத்தியாவசிய திருத்த வேலைகளை நாம், பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்தும் மாணவர்களின் வசதிக்கட்டணத்திலிருந்தும் மேற்கொண்டு வருகிறோம்.

"சில பெற்றோர் தம்மால் இயன்ற பொருள், பண உதவிகளை செய்து வருகிறார்கள். இவ்வாறு மேற்கொள்ளப்படும் திருத்த வேலைகள் சேதங்களில் ஆயிரத்திலொரு பங்கைக் கூட பிரதியிட முடியாது" என்றார்.

கல்லூரிக்கு இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட சேதங்கள் 6½ லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. [இ-5]

## நியமனம்

பாசையூரைச் சேர்ந்த திரு ஈ. எச்லின் நெடுந்தீவு, நயினாதீவுப் பகுதி இளைஞர் சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். (சி-167)

# வடமராட்சி கிழக்கு மக்களுக்குச்சர்வோதயம் உணவு விநியோகம்

குருநகர், ஜூன் 3
சர்வோதய யாழ் கிளையால் எடுத்துச் செல்லப்பட்ட முதற்கட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வடமராட்சி கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

மேலும் ஒருதொகுதி பொருள்கள் அப்பகுதி மக்களுக்கு எடுத்துச் செல்லப்பட இருப்பதாக இணைப்பாளர் திரு. ஜே. சிவசுப்பிரமணியம் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் தாளையடி, கட்டைக்காடு, வண்ணான்குளம், வெற்றிலைக்கேணி, மருதங்கேணி, பூனைத்தொடுவாய், ஆழியவளை, தெல்லியான், உடுத்துறை பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகித்து வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்து கொண்டு செல்லும் பொருள்கள் குடாரப்பு, குடத்தனை, நாகர்கோயில் போன்ற இடங்களில் விநியோகிக்க இருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது. (ஒ-51

## வடக்கு, கிழக்கு தொலைத்தொடர்பு சீரமைப்புக் குறித்து ஆராய்வு

வவுனியா, ஜூன் 3
வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தொலைத் தொடர்பு திணைக்களத்தின் உயரதிகாரிகள், அதிகாரிகள் ஆகியோர் வவுனியாவில் சந்தித்து இரு மாகாணங்களிலும் உள்ள 7 மாவட்டங்களினதும் தொலைத்தொடர்பு சேவைகள், சீரமைப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்தார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரதம தொலைத்தொடர்பு பொறியியலாளர் திரு. எஸ். கனகசூரியர் தலைமையில், வவுனியா பிராந்திய தொலைத் தொடர்புப் பொறியலாளர் அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

தற்போது இம்மாவட்டங்களில் நிலவும் குறைபாடுகள், பாதிப்புகள், பற்றாக்குறைகள் தொடர்பாகவும்' புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறவிருக்கும் மூன்றாண்டுத் திட்ட புனர்நிர்மாண வேலைகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.
(ஒ-164)


### முதலாவது பிறந்த தின வாழ்த்து



**செல்வன் துமிலன்**

பருத்தித்துறையைச்சேர்ந்த திரு சுப்பிரமணியம் சிவயோகராஜன் திருமதி பவானி சிவயோகராஜன் தம்பதிகளின் அருமைப் புதல்வன் செல்வன் துமிலன் இன்று முதலாவது பிறந்த நாளை மேற்கு ஜேர்மனியில் (BERGISH GLADBACH-1) தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா: அம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தி, மாமன்மார், மாமிமார், மைத்துனர்கள், மைத்துனிகள் எல்லோரும் கல்வி, செல்வம் பெற்று தேகாரோக்கியத்துடன் நீடுழி வாழ வாழ்த்துகிறார்கள். (3444)



# டுபாய்

## உடனடி வேலைவாய்ப்புகள்

### அரசாங்க கட்டிட வேலைத்திட்டம்

| | | எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| 1. | சிவில் என்ஜினியர் | 2 | 900 | US$ |
| 2. | மெக்கானிகல் என்ஜியர் | 2 | 800 | ,, |
| 3. | எலெற்றிக் என்ஜினியர் | 2 | 900 | ,, |
| 4. | காம்ப் பொஸ் என்ஜினியர் | 2 | 500 | ,, |
| 5. | சிவில் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 6. | மெக்கானிக்கல் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 7. | எலெற்றிக்கல் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 8. | தச்சுவேலை மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 9. | கம்பிவேலை மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 10. | கார்மெக்கானிக் | 2 | 350 | ,, |
| 11 | அளவையாளர் | 2 | 400 | ,, |
| 12 | நேரக்கணிப்பாளர் | 3 | 350 | ,, |
| 13. | உதவி நேரக் கணிப்பாளர் | 5 | 300 | ,, |
| 14. | மேசன் (F) | 5 | 275 | ,, |
| 15. | மேசன் [R] | 10 | 250 | ,, |
| 16. | உதவி மேசன் | 15 | 175 | ,, |
| 17. | தச்சுவேலையாளர் [F] | 5 | 275 | ,, |
| 18. | தச்சுவேலையாளர் [R] | 10 | 250 | ,, |
| 19. | உதவி தச்சுவேலையாள் | 15 | 175 | ,, |
| 20. | லெட் மான் | 10 | 250 | ,, |
| 21. | உதவி லெட் மான் | 15 | 175 | ,, |
| 22 | கம்பி வளைப்போர் | 10 | 250 | ,, |
| 23. | உதவி கம்பி வளைப்போர். | 15 | 175 | ,, |
| 24. | பிளம்பர் | 10 | 250 | ,, |
| 25. | உதவி பிளம்பர் | 15 | 175 | ,, |
| 26. | குளிரூட்டல் ரெக்னீசியன் | 5 | 350 | ,, |
| 27. | குளிரூட்டல் சென்றலைஸ் | 10 | 350 | ,, |
| 28. | பெயின்ரர் (கட்டடம்) | 10 | 250 | ,, |
| 29. | உதவி பெயின்ரர் | 15 | 175 | ,, |
| 30. | எலெற்ரீஷியன் (வீட்டு) | 10 | 275 | ,, |
| 31. | உதவி எலெற்ரீஷியன் | 15 | 200 | ,, |
| 32. | வெல்டர் | 10 | 250 | ,, |
| 33. | உதவி வெல்டர் | 15 | 175 | ,, |
| 34. | தொழிலாளர் | 35 | 175 | ,, |
| 35. | கணக்காளர் | 1 | 400 | ,, |
| 36. | உதவி கணக்காளர் | 2 | 300 | ,, |
| 37. | ஸ்ரோர் கீப்பர் | 1 | 400 | ,, |
| 38. | உதவி ஸ்ரோர் கீப்பர் | 2 | 300 | ,, |
| 39. | கார் பெயின்ரர் | 5 | 300 | ,, |
| 40 | L. V. றைவர் | 7 | 250 | ,, |
| 41. | H. V. றைவர் | 3 | 300 | ,, |
| 42. | H. V. ஒப்பிறேற்றர் | 5 | 350 | ,, |
| 43. | சமையலாளர் | 2 | 320 | ,, |
| 44. | உதவி சமையலாளர் | 6 | 200 | ,, |
| 45. | கந்தோர் உதவியாளர் | 10 | 200 | ,, |
| 46. | துப்பரவாக்கிகள் [விமானநிலையம்] | 100 | 200 | ,, |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**K. லிங்கம்**
காளவன் சந்தி,
சுழிபுரம்.

**A. தவச்செல்வம்**
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.

[C 5265]



## மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு

# பிரயாண ஒழுங்குகள்

## (M. கீதபொன்கலன்)

★ குவைத் ★ சவூதி அரேபியா
★ டுபாய்

மேற்குறிப்பிட்ட நாடுகளில்
ஆஸ்பத்திரி கிளீனர்ஸ், எயார்போட் கிளீனர்ஸ், லேபரர்ஸ், மேசன், காப்பென்ரர், றூம் போய், வெயிட்டர், செக்கியூரிட்டிகார்ட், ட்ரைவர், மெக்கானிக், இலக்ரீஷியன். போன்ற வேலைகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

தரமான வேலை- நியாயமான சம்பளம்.
இரண்டு வருட ஒப்பந்தம், உணவு, தங்குமிடம், வைத்திய பராமரிப்பு யாவும் இலவசம்.

பாஸ்போட், 10 படம், போட்டோஸ்ரட் பிரதிகளுடன் நேரில் வரவும்.
குறிப்பு: முகவர் ஊரில் இருப்பதால் உடனே நேரில் வந்து சந்திக்கவும்.

**M. Geethaponkalan**

முகவரி:
இலங்கைமாதா லேன்,
சில்லாலை கிழக்கு,
பண்டத்தரிப்பு,
[4025]

கொழும்பு முகவரி:
Faza Villa,
25/5, Central Road,
Colombo 12.
T. No. 21963



# A/L 89

## மாணவர்கட்கு

**ஆரம்பம்: 4-6-1988**

வெப்பவியல்
Sat — Sun.
12-30

பொறியியல்
Thu 2 30 — 4 30

90 ஒளியியல்
Sat — Sun
6 30 — 7 30

ஆசிரியர்:-
Mr. மணியம் B. SC [Hons]
ஆரம்பமாகவுள்ளது

வெப்ப இரசாயனம்
ஆசிரியர்:-
Mr. நாகரட்ணம்
Batch I — Sat & Sun
10-30 — 11-30
Batch II — 1-30 — 2-30

3 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதிக்கு அருகாமையில்)
Batch — III — Sat — Sun
4-15 — 5-15

மணல்தறை லேன், கந்தர்மடம்.
C 5240



# Diploma in Computer Programming Basic

## 4Months-Weekday Classes

Practicals on
**C. P. U**
**Cassette Drive**
**Disk Drive**
**Printer**

**Fees: மாதம் 250/-**

A valuable certificate will be issued at the end.
வெளிநாடு செல்பவர்களுக்கு மிக உகந்தது.

**ஆரம்பம்: 10-6 88**

Aptitude Test - 9-6 88
தேர்வுப் பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திக்கு Lady Lovelace Memorial Scholarship வழங்கப்படும்


**C. I. M. A., A. A. T., I. A. B.** வகுப்புகள்
இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன

# School of Business Administration

(OLR தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)
16, 3ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
C 5283


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. ய. லூயிஸ் சந்திரபோஸ் [சந்திரன்]**

மலர்வு: 1966-01-16
உதிர்வு: 1987 06.03

ஊரார் போற்றி நிற்க
உத்தமனாய் வாழ்ந்திருந்து
எம்மை விட்டுப் பிரிந்து
எட்டாத தூரம் சென்றாய்
நெஞ்சை விட்டு அகலா சந்திரனே
-உன் நினைவு மாறுது எந்நாளும்
பண்புக்கு ஓர் உறைவிடமாய் பாசத்தின்
ஊற்றெடுப்பாய் பார் போற்ற
வாழ்ந்திருந்தீர்
பரமனடி சேர்ந்து விட்டீர்
-உயர்வு நிலை அடைந்து
விட்ட உத்தமனே!

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். உமது இதய நினைவுகளை எண்ணி நாம் என்றும் கலங்குகின்றோம்.

ஐயா, அம்மா, அண்ணன்மார் அக்காமார், உறவினர்கள், நண்பர்கள்.

ஊறணி-காங்கேசன்துறை. [3502]

---

## மூன்றும் மாத கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 26-8-68
மறைவு 6-3-88

**கு. ரமேஸ்வரன்**
(மாணவன் - யாழ் - இந்துக் கல்லூரி)

வானத்து நிலவெனவே
வளர்ந்திட்ட எங்கள் ராம்
வாரி அணைக்க என் இதயம் துடிக்குதே
வானத்துள் நீ மறைந்தாயே? உன்

சிரித்த முகமெங்கே?
சிங்காரத் தோற்றமெங்கே? நீ
கற்ற கல்வியெல்லாம்
கானல் நீரானதேன்.

எண்ணிலடங்காத் துயரோடு
எண்பத்தேழு நாட்கள் சென்றதடா
எண்ணாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் அன்னையவள்
அழுத கண்ணீர் வற்றாது ராம் - நாங்கள்
அழுத கண்ணீர் வற்றாதடா

குடும்பத்தினர்
உறவினர்கள்.

டச்சு றோட்
உடுவில் மேற்கு
சுன்னாகம். [4031]

---

# உடனடி வேலைவாய்ப்பு

**KUWAIT CLEANERS KUWAIT DRIVERS**

குவைத் கிளீனேர்ஸ் 700 பேர் உடன் தேவை
குவைத் றைவர்ஸ் வயது 18 — 49 வரை

பாஸ்போட்டும், 3 பாஸ்போட் சைஸ் படமும், அனுபவச் சான்றிதழ்கள்.
குவைத் றைவர்களுக்கு மத்திய கிழக்கு நாட்டில் தொழில் பார்த்த Licence தேவை.
Saudi Arabiaவில் ALHODARI COMPANYக்கு Drivers, Cleaners உடன் தேவை.
Drivers;- 100 பேர், சம்பளம் 600+150 SR, வயது 21 — 49 வரை.
Cleaners;- சம்பளம் 400 SR. வயது 21 — 48 வரை

## Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1 Cleaners | 2 Carpenters | 3 Mason | 4. Electrician |
| 5 Plumber | 6 Welder | 7. Tinker | 8. Spray painter |
| 9. Lathemen | 10. Auto Electrician | 11 Clerk | 12 Supervisior |
| 13 Civil Engineer | 14. Mechanical Engineer | 15. Electrical Engineer | 16 Electronic Engineer |
| | 17. Mechanic | 18. A.C. Mechanic | 19. Drivers. |

வயது 21 — 50 வரை

30-6-88க்கு முன் பயணம் செய்யலாம் போக விரும்புவோர் Passport, 3 Passport சைஸ் படங்கள், சான்றிதழ்களுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் Saudi, Singapore, Dubai, Abudhabi, Kuwait இவ்விடங்களிற்கு House-Maid ஆக போக விரும்புவோர்க்கும் அவற்றிற்குரிய முழு ஒழுங்குகளும் செய்து கொடுப்போம். செல்ல விரும்புவோர், பாஸ்போட், 3 பாஸ்போட் சைஸ்படம், 1 முழு கலர்படம் இவை யாவற்றுடனும் எமது காரியாலயத்தில் போவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவும்.

மு. கு :- முற்பணம் அறவிடமாட்டோம் தங்களுக்குரிய Visa பெற்றுத் தந்த பின்னர் அச்செலவுத் தொகையை பெற்றுக்கொள்வோம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7 00 மணி தொடக்கம் பி. ப. 1-00 மணி வரை

# T. V. Travels & Tourist

**Brown Road,**
**(Kokuvil Railway Station Front)**
**KOKUVIL.**

[C5250] BRANCH:- Courts Road, Mallakam.

---

## அழைப்பிதழ்

**ஏ. சி. எஸ். தொகுதி ஸ்தாபனங்கள்**

90, கே கே எஸ் வீதி, சுன்னாகம்.

அன்புடையீர்,

1963 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகிய எமது ஸ்தாபனம் வளர்ந்து இன்று 25 வயதெய்தியுள்ளது

1988 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 90, கே கே எஸ் வீதி, சுன்னாகம் என்னும் இடத்தில்நடைபெறவிருக்கும் 'வெள்ளிவிழா' வைபவம் வில்வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்களை கலந்து ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'துர்க்கா ஹோம்' கா.சி.செ. முத்துக்குமாரு
8/2 தோப்பை வீதி, (இயக்குநர்)
உடுவில் கிழக்கு, தொலைபேசி: 274 சுன்னாகம்
சுன்னாகம். 23460 யாழ்ப்பாணம்.

(C 5260)

---

## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**திருவாளர் சி. சிவகுரு அவர்கள்**

தோற்றம்: 11-5-1908
மறைவு: 25-6-1986

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எம்மை எல்லாம் வழிநடத்திச் சென்ற எமது அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எமது உள்ளத்தை விட்டு அகலாது தங்களின் தூய அன்பை என்றும் நினைவு கூர்வதோடு தங்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மகன்
கனகுபாலசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

அல்வாய் வடக்கு,
அல்வாய். [4021]

---

## ஓராண்டுநினைவஞ்சலி



**வல்லிபுரம் வசிகரன்**
[நாவற்காடு வரணி]

ஆண்டவன் படைப்பு:- 20-2-1968
ஆண்டவன் பறிப்பு:- 16-05-1987
திதி;- 03 06-1988

இளவெறியில்
இளந்திடவா உன்னை
ஈழத்தாய் பெற்றெடுத்தாள்
இனியவனே எம் வசிகரனே
நீ எம்மைப் பிரிந்து ஓராண்டு ஆனாலும்
என்றும் எம் உள்ளத்தில்
வாழ்கின்றாய் திருவுருவாய்
உன் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, சகோதரர்கள், உற்றார்கள்,
உறவினர்கள், நண்பர்கள்,

[4043]

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் சுமார் 2837 தரம்பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

முடிவுத்திகதி- 07-06-1988 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை. விண்ணப்பப்பத்திரங்களுக்கும், விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
தென்மராட்சி மேற்கு,
ப. நோ. கூ. சங்கம், கைதடி,
1988- 06- 01. (4038)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



**சு. செ. மகாதேவா**
[சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் முன்னாள் மேயரும்]

பிறப்பு: 20-11-1912
இறப்பு: 14-6-1987

எங்கள் இல்லத்தின் தெய்வமாய் துலங்கி குடும்பத்தின் ஒளிர் விளக்காய், பாசத்தின் பிறப்பிடமாய், அறிவின் சுடரொளியாய், அன்பாய், பண்பாய், பாசமாய் எம்மை எல்லாம் வளர்த்து ஆறாத்துயரில் விட்டகன்று ஓராண்டு பூர்த்தியாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் வாழ்வீர்கள். உங்கள் திருநாமத்தைச் சொல்லி நாம் வாழ்வோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மறவா மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.
(3429)

---

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**பொ. செந்திவேல் (செந்தில்)**

தோற்றம்: 25 06-1935
மறைவு: 05-05-1988

அன்பாயும் பண்பாயும் எம்மையெல்லாம் அரவணைத்து வழி நடத்திய தெய்வமே எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி இறைவன் திருவடி சேர்ந்துவிட்ட எங்கள் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனை வேண்டுகிறோம்.

இறுதிச்சடங்கின் பொழுது உதவி புரிந்தவர்களுக்கும் எமது கவலையில் பங்கு எடுத்துக் கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பினோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

04-06-1988 சனிக்கிழமை [நாளை] நடைபெற இருக்கும் வீட்டுக்கிரிகைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

71, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [3448]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

இறைவனிடம் தீவிர பக்தி கொள். கடுமையாக உழை. உழைப்பின்றி எதுதான் ஒருவர்க்குக் கைகூடும்?

— அன்னை சாரதாதேவியார்


# உதயன்

உண்மை - துணிவு - நடுநிலைமை

இல:-258/12 கஸ்தூரியார் வீதி, தொலைபேசி: 24800, 22078
யாழ்ப்பாணம்
03-06 1988
த.பெ. இல: 88


## டாக்டர்கள் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் — பெரிய ஆஸ்பத்திரியில் — நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை குறித்து ஏற்கனவே இப்பத்தியில் எழுதியிருந்தோம்.

தமிழ்ப் பகுதிகளில் நிலவும் நிச்சயமற்ற நிலை காரணமாக, அனுபவமும் திறமையும் வாய்ந்த டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். வெளிமாவட்டங்களில் பணிபுரியும் டாக்டர்களோ வடபகுதி வருவது பாதுகாப்பில்லை என்று கருதி இங்கு இடமாற்றம் பெற்றுவரப் பின்னிற்கிறார்கள்.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளின் இராணுவ அட்டூழியங்கள் தீவிரமடைந்த 1984 ஆம் ஆண்டிலிருந்து, மேற்கூறிய சாக்கு மற்ற பின்னணி தொடர்ந்து நீடிக்கிறது. மாதத்துக்கு மாதம் நிலைமை மோசமடைந்து வருகிறது. அதாவது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும், குடாநாட்டில் உள்ள ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் பணிபுரியும் டாக்டர்கள் சேவையை விட்டு நீங்குகிறார்கள்.

வைத்தியத் தொழில் மேன்மை மிக்கது. வைத்தியர்கள் மக்கள் உயிர்களைக் காப்பாற்றும் தெய்வங்களாகக் கருதப்படுபவர்கள். வைத்தியர்கள் தமது தொழிலைச் சேவையாகச் செய்ய வேண்டும்; வெறும் உத்தியோகமாகக் கொள்ளக் கூடாது எனக் கூறப்படுவதும் வழக்கம்.

ஆனால் நிச்சயமற்ற பாதுகாப்புச் சூழ்நிலையில், தமது உயிரைத் தியாகம் செய்து மற்றவர் உயிரைக் காப்பாற்ற முன்வரும் டாக்டர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே எம்மத்தியில் இருக்கிறார்கள் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டு வருகிறது.

வைத்தியர்களின் மகிமை புரியாது, அவர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும் வேளையிலேயே சுடப்பட்டும், தொல்லைப்படுத்தப்பட்டும் வந்தால் எத்தனை பேர் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய முன்வர முடியும் என்ற ஒரு கேள்வியும் எழவே செய்கிறது.

எனினும், மக்கள் இன்னல் அனுபவிக்கும் நேரத்திலும் கஷ்டப்படும் நேரத்திலும், மக்களோடு மக்களாகச் சேர்ந்து அவற்றை அனுபவிக்கப் பின்னின்று, நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போகும்போக்கு ஏற்கக்கூடியதல்ல.

தானும் தமிழ்ச் சமூகத்தின் ஓர் அங்கம் என்று நினைக்கும் ஒருவன், இந்த மண்ணை தனது சொந்த மண் என்று எண்ணுபவன், இனப்பற்று உள்ளவன், சூழ்நிலைக்கு அஞ்சி தனது கடமையிலிருந்து நீங்க மாட்டான். வெளிநாடு செல்லவும் மாட்டான்.

ஆனால் எம்மில் வசதி படைத்த மக்களில் எத்தனை பேர் அத்தகைய சிந்தனை உடையவர்கள் என்பதை மதிப்பிட்டுப் புள்ளி விபரம் எடுத்தால் பத்துச் சத வீதமும் தேறுமா என்பது சந்தேகமே!

எதுவாக இருந்தாலும், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைப் பொறுத்தமட்டில், வெளிநோயாளர் பிரிவு, டாக்டர்கள் தட்டுப்பாட்டால் உலக்கை தேய்ந்து உளிப்பிடியாகும் நிலை மிகமிகக் கவலைக்குரியதாகும்.

22 டாக்டர்கள் பணிபுரிந்த இடத்தில் ஆறு பேர் மட்டும் கடமையாற்றுவது என்பது மக்களுக்குரிய சேவை மறுக்கப்படுவதற்குச் சமனாகும்.

அது மூடப்படும் நிலை ஏற்படுவதற்கு முன்பதாகத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

போதனா வைத்தியசாலை அமைச்சு, இவ்விடயத்தில் அக்கறை காட்டாது, செவிடுதாய் நிலையில் நின்று இயங்கும் என்றே எதிர்பார்க்க வேண்டும்.

ஆகையால் இச்சூழ்நிலையில் தொண்டர் அடிப்படையில் சேவையாற்றக்கூடிய இளைப்பாறிய டாக்டர்களின் சேவையைப் பெறுவதற்கேனும் முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

யாழ் ஆஸ்பத்திரியைக் காப்பாற்றுவதை ஓர் மனித நேய சேவையாகக் கருதி ஒரு சிலராவது இதில் முன்னின்று உழைத்தல் அவசியம்.

யாழ். ஆஸ்பத்திரியை இராணுவ நடவடிக்கை ஸ்தலமாக்குவதையும், போர்க்களமாக்குவதையும், வைத்தியசேவை புரிவோரை மிரட்டுவதையும் சம்பந்தப்பட்ட சகலரும் நிறுத்தினால், பல டாக்டர்கள் சேவையிலிருந்து விலகுவதைத் தடுக்கமுடியும்.

## 100 மாணவருக்கு சீருடைகள்

சாவகச்சேரி, ஜூன் 3

அறவழிப் போராட்டக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட வன்செயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நூறு பிள்ளைகளுக்கு பாதணி, சீருடைகள் வழங்கப்பட்டன.

அறவழி வாழ்வு நிலயத்தில் குழுவின் நிர்வாக இயக்குநர் திரு. க. ஜீவகதாஸ் தலைமையில் இடம்பெற்ற இது தொடர்பான வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி திரு. சி. சுரேந்திரனும் அவரது பாரியாரும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

திருமதி சுரேந்திரன் பரிசில்களை வழங்கினார். (இ-31)

வளைகுடா நெருக்கடி:

# ஈரான் புதிய ஏவுகணை தளம் அமைக்கிறது; அமெரிக்க ஏவுகணைக் கப்பல் விரைகிறது!

வாஷிங்டன், ஜூன் 2

வளைகுடா யுத்தத்தில் மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

ஈரான் தனதுபிரதேசத்தில் நவீன ஏவுகணை ஏவும் தளம் ஒன்றை அமைத்து வருவதே இப்புதிய நெருக்கடிக்குக் காரணம் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதற்குப் பதில் நடவடிக்கையாக அமெரிக்கா, நவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்ட யுத்தக்கப்பல் ஒன்றை வளைகுடாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஈரான் புதிதாக அமைத்துவரும்தளத்தில் இருந்து ஹொர்மூஸ் நீரிணைக்குள் பிரவேசிக்கும் எந்தக் கப்பல் மீதும் நேரடியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தும் அபாயநிலை ஏற்பட்டிருப்பதாக அமெரிக்கா கருதுகின்றது. (எ)

வெளி உலகில்

## பஞ்சாப் பள்ளத்தாக்கு கெரில்லாக்கள் வசம்

காபூல், ஜூன் 2

ஆப்கனில் சோவியத் துருப்புக்கள் விட்டுச் சென்ற பஞ்சாப் பள்ளத்தாக்கை கெரில்லாக்கள் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இப்பள்ளத்தாக்கில் நிலைகொண்டிருந்த பத்தாயிரம் சோவியத் துருப்புக்கள் தாயகம் திரும்பிவிட்டனர். அதைத் தொடர்ந்தே கெரில்லாக்கள் அப்பிரதேசத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அப்பள்ளத்தாக்கே சோவியத் துருப்புக்கள் தாயகம் திரும்பும் பிரதான பாதையாக இருக்கப் போகிறது.

ஆகவே திரும்பிச் செல்லும் சோவியத் துருப்புக்களைத் தாக்குவதற்கு பள்ளத்தாக்கை பயன்படுத்தப் போவதாக கெரில்லாக்கள் அறிவித்துள்ளனர். (எ)

## பொற்கோயில் தலைமைக் குருமார் பதவிநீக்கம்!

சண்டிகார், ஜூன் 2

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பொற்கோயிலின் ஐந்து தலைமைக் குருமாரையும் சிரோமணி குருத்துவார பிரபந்தக் கமிட்டி நீக்கிவிட்டது.

அவர்களுக்குப் பதில் புதிய குருமார்களை பிரபந்தக் கமிட்டி நியமித்திருக்கிறது.

இதனிடையில், பொற்கோயிலில் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த மாசுபடுத்தும் சம்பவங்களுக்கு பிரபந்தக் கமிட்டி மன்னிப்புக் கோரியதாக அறிவிக்கப்பட்டது.

பிரபந்தக் கமிட்டிக்குத் துரோகம் செய்த காரணத்துக்காகத்தான் ஐந்து தலைமைக் குருமார்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர் என்று கமிட்டி சார்பில் அறிவிக்கப்பட்டது. (எ)

## அமெரிக்காவுக்கு சிங்கப்பூர் எச்சரிக்கை!

சிங்கப்பூர், ஜூன் 2

அமெரிக்கத் தலையிடு தொடரின் அணிசேரா இயக்கத்தில் சேர்ந்து விடப்போவதாக சிங்கப்பூர் அரசு எச்சரித்துள்ளது.

சிங்கப்பூர் உதவிப் பிரதமர், நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன் கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

உள் விவகாரங்களில் தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டி அமெரிகத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை சிங்கப்பூர் அரசு வெளியேற்றியது சம்பந்தமாகப் பேசியபோதே உதவிப் பிரதமர் இதைத் தெரிவித்தார்.

சிங்கப்பூர் தற்சமயம் மேற்கு நாடுகளின் ஆதரவு நாடாகவே இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது (எ)

ஜுனஜோ அரசில் ஊழல்;

## கலைப்புக்குக் காரணம் காட்டுகிறார் ஸியா!

இஸ்லாமாபாத், ஜூன் 2

நாட்டில் ஊழலை வளர்ப்பதில் தான் ஜுனஜோ அரசு ஈடுபட்டு வந்தது.

அதனால்தான் அமைச்சரவையைக் கலைத்தேன் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு வானொலி, டெலிவிஷன் மூலம் ஸியா கடந்த திங்கள் இரவு உரை நிகழ்த்தினார்.

அப்போதுதான் சிவில் அமச்சரவையைக் கலைத்ததன் காரணத்தை ஸியா வெளியிட்டார்.

ஆட்சிக் கலைப்பு ஜனநாயகம் தோல்வியடைந்ததைக் காட்டவில்லை; அதற்குப் பதிலாக ஜனநாயக நடைமுறைகளை அமுல் நடத்துவதில் சிலர் தோல்வி கண்டுவிட்டதையே எடுத்துக் காட்டுகிறது.

இப்படி ஜனாதிபதி ஸியா சொன்னார்.

இதனிடையில்- அரசைக் கலைத்தது ஜனநாயக விரோத நடவடிக்கையாகும் என்று பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் முகமட்கான் ஜுனஜோ தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி ஸியாவின் செயல் தன்னிச்சையானது என்றும் ஜனாப் ஜுனஜோ கண்டித்தார். (எ)

## சோவியத் அறிவிப்பு

மாஸ்கோ, ஜூன், 2

ஆப்கனிஸ்தானில் கடந்த எட்டரை ஆண்டுகளாக நடந்துவந்த கெரில்லா யுத்தத்தில் 13 ஆயிரத்து 310 சோவியத் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

மாஸ்கோவில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இத்தகவலை உத்தியோக பூர்வமாக அறிவித்தனர்.

35 ஆயிரம் சோவியத் வீரர்கள் வரையில் காயமடைந்தனர். 300சோவியத் வீரர்களைக் காணவில்லை —

இப்படி அந்த சோவியத் பாதுகாப்புஅமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

## அரபாத்தின் லிபிய விஜயம்!

திரிபொலி ஜூன் 2

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் லிபியாவுக்கு திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

லிபியத் தலைவர் கேர்னல் மும்மர் கடாபியுடனான நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்ளும் ஒரு நடவடிக்கையாகவே இவ்விஜயம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# மாஸ்கோ உச்சி மாநாடு முடிவடைந்தது!

## இரண்டு தலைவர்களும் கூட்டறிக்கை

மாஸ்கோ உச்சி மாநாட்டின் முடிவில் அமெரிக்க அதிபர் றேகனும் சோவியத் தலைவர் கோர்பச்சேவும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

நீண்ட தூர ஏவுகணை ஆயுதங்களை ஐம்பது சதவீதமாகக் குறைக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்குத் தேவையான சூழ்நிலையை உச்சிமாநாடு ஏற்படுத்தியிருப்பதாக இரு தலைவர்களும் கூட்டறிக்கையில் தெரிவித்தனர்.

கூட்டறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் இருதலைவர்களும் கூட்டாக செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டனர்.

இம்மாநாடு சோவியத் டெலிவிஷனில் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது (எ)

# வவுனியா மாவட்டத்தில் புனரமைப்பு வேலைகளுக்கு உலக வங்கி உதவும்

வவுனியா, ஜூன் 3

பாதிப்புக்கும் சேதங்களுக்கும் உள்ளான வவுனியா மாவட்டத்தைப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியுதவிகளை வழங்கத் தயாராக உள்ளதாக அண்மையில் வவுனியாவிற்கு விஜயம் செய்த உலக வங்கியின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

விசேட விமானமூலம் வவுனியா இராணுவ விமான இறங்குதுறைக்கு வந்து சேர்ந்த இக் குழுவினரை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ரீ. லங்கா நேசன் வரவேற்றார்.

வவுனியா மாவட்டத்தின் நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர், பிராந்தியக் கல்விப்பணிப்பாளர், சமூகநல சேவைகள் உதவி ஆணையாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் மற்றும் செயலக உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் கச்சேரியில் நடைபெற்றது.

உலக வங்கி குழுவினர் வவுனியா மாவட்டத்தின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகள் தொடர்பாக இவர்களுடன் கலந்துரையாடினார்கள்.

இக் குழுவினர் வவுனியா சந்தைப்பகுதி தமிழ் மகா வித்தியாலயம் கண்டி வீதி ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

இக் குழுவினருடன் தேசிய புனரமைப்பு வழி நடத்தற்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு ஒஸ்ரின் பெர்னாண்டோவும் தமது உயரதிகாரிகள் சகிதம் வந்திருந்தார். சி - 164

## வெள்ளி விழா காணும் ஏ.சி.எஸ்

யாழ்ப்பாணம் ஜூன் 3

சுன்னாகம் ஏ சி எஸ் தொகுதி ஸ்தாபனங்கள் எதிர்வரும் 5-ஆம் திகதி வெள்ளி விழா கொண்டாடுகின்றன.

சுன்னாகத்தில் காலை 10.00 மணிக்கு வெள்ளி விழா வைபவங்கள் ஆரம்பமாகும்.

இந்த ஸ்தாபனங்கள் 1963 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி கா. சி செ. முத்துக்குமாருவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்பு யாழ்ப்பாணத்தில் இருந்த இந்த ஸ்தாபனங்கள் 1984ஆம் வருட கலவரங்களின் போது பாதிக்கப்பட்டதற்போது சுன்னாகம், கே. கே.எஸ். வீதியில் இயங்கி வருகின்றன. [இ-160]



பொய்யாமொழி

குறள்:
தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

பொருள்:
காலந்தாழ்த்துச் செய்யத் தக்கவற்றைக் காலந்தாழ்த்தே செய்யவேண்டும்; காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்யவேண்டிய செயல்களைச் செய்யக் காலந்தாழ்த்தக் கூடாது.

சமய சந்திகளில்

## ஸ்ரீபிடாரி அம்பாள் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 3

நயினாதீவு தில்லைவெளி ஸ்ரீபிடாரி அம்பாள் வருடாந்த பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து எட்டுத் தினங்கள் அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும், பூசைகளும் நடைபெற்று ஒன்பதாவது தினமான 11ஆம் திகதி சனிக்கிழமை குளிர்த்தி அபிஷேகமும், விசேஷ பொங்கல் விழாவும் நடைபெறும். (இ சி)

# யாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்க நல்ல முடிவு எடுக்கப்படவேண்டும்

## பிரசைகள் குழு கோரிக்கை

சுன்னாகம், ஜூன் 3

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள அனைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் அண்மைக்காலநிகழ்வுகள் குறித்து சுயமாகச் சிந்தித்து குறைகளைக் களைந்து பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கும் வகையில் நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும்.

சுன்னாகம் பிரசைகள் குழு யாழ். மக்களுக்கு விடுத்துள்ள பகிரங்க அறிக்கையில்மேற்கண்டவாறு கேட்டுள்ளது

பிரசைகள் குழுவின் தலைவரும் முன்னாள் வடபிராந்திய கல்விப் பணிப்பாளருமான திரு தி மாணிக்கவாசகரும், பிரசைகள் குழுவின்செயலாளர் திரு இ சுப்பிரமணியம் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

யாழ். பல்கலைக்கழகம் தமிழ் மாணவர்களின் ஒரே ஒரு உயர்கல்வி நிறுவனம்என்பதையும்அதன் மூலமே எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சி அடையும் என்பதையும் எவரும் மறுக்கமுடியாது

அண்மைக்கால நிகழ்வுகள் யாழ், பல்கலைக்கழகத்தைத் தொடர்ந்து இயங்க முடியாதநிலைக்கு தள்ளி விடுமோ என கல்வி மான்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது

தமிழ் மாணவர்களின் கல்வியில் தரப்படுத்தல் உட்பட பல தடைகளை ஏற்படுத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரும் வகையிலேயே அண்மைக்கால நிகழ்வுகள் தோற்றமளிக்கின்றன

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள அனைவரும் இவ்விடயத்தில சுயமாகச் சிந்தித்து குறைகளைக் களைந்து பல்கலைக்கழகம் தொடர்ந்தும் இயங்கும் வகையில் நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்மாணத் துறையினருக்கு சர்வதேச மட்டப் பரீட்சை

யாழ்ப்பாணம்.ஜூன் 3

நிர்மாணத்துறையில் தொழில் புரிவோருக்கான தேசிய தொழில் பரீட்சையை நடத்துவதற்கு தேசிய தொழிற் பயிற்சி சபை முடிவு செய்துள்ளது.

இதற்கான பரீட்சைகள் ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் தமிழ் மொழி மூலம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, சம்மாந்துறை, அம்பாறை, இரத்மலானை, கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

உலக வங்கியின் அனுசரணையுடனும் பிரிட்டிஷ் கவுன்சில் ஆலோசனையுடனும், சர்வதேச தராதரத்திற்கேற்ப இப்பரீட்சைகள் நடத்தப்படும்.

மேசன், தச்சுவேலை, நீர்க்குழாய் தொழில், மின்கம்பி இணைப்பு, உருக்குக்கம்பி நிலைப்படுத்தல், இலேசான பாரமான இயந்திர பொறியியலாளர். பொறியியல் பாரநிர்மாண உபகரண இயக்குநர், நிர்மாண மேற்பார்வையாளர் ஆகிய துறைகளில் ஈடுபட்டிருப்போருக்கே இப்பரீட்சைகள் நடைபெறும்

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கல்வித் தகைமையே வயதெல்லையே தேவையில்லை குறிப்பிட்ட துறையில் குறைந்தது ஒருவருட அனுபவம் சட்டாயம் இருத்தல் வேண்டும்.

இது பற்றிய மேலதிக
(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உதயன்

3 - 6 - 1988 வெள்ளிக்கிழமை



மிளகாய்த் தூள்
✶ மஞ்சள் தூள்

வீட்டுப் பாவனைக்குரிய முறையில் தயாரிக்கப்பட்டது.

பாவனையாளர், மொத்த விற்பனையாளர்களுக்கு விசேஷ கழிவுண்டு.

**அண்ணு தொழிலகம்**
இணுவில்.



## C. I M. A./A. A. T./I. A. B.

நவம்பர்/டிசெம்பர் 88.

**Weekend/Weekday Classes**

ஆரம்பமாகிக்கொண்டிருக்கின்றன

Full Course Fees :

| | |
|---|---|
| C. I. M. A. (Stage 1) | — 900/- |
| A. A. T (Stage 1) | — 200/- |
| I. A. B Foundation) | — 50/- |

Special Features :

Friendly atmosphere
Free cyclostyled notes
Limited numbers in each class.
Unlimited hours of lectures.
Individual attention.
Success assured.

கமலகுமார், குமாரவேல், நவநேந்திரன், புஷ்பா, தவரட்ணசிங்கம், சிவபாதசுந்தரம்.

கம்பியூட்டர் வகுப்புகள்
புதிய பிரிவு ஆரம்பம் : 10 - 6 - 88

**School of Business Administration**
(O L R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)
16, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(C 5294)


குற்றச் செயல்கள்:

# ஆஸ்பத்திரிப் பொலீஸில் சந்தேகநபர்கள் கையொப்பம் இடுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 3

கிரிமினல் குற்றங்கள் மற்றும் போக்குவரத்துச் சம்பந்தப்பட்ட குற்றங்கள் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிப் பொலீஸ் பிரிவில் கையொப்பமிட வேண்டும்.

இந்தப் புதிய நடைமுறை கடந்த வாரம் முதல் யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் அமுலுக்கு வந்துள்ளது.

கடந்த சில வருடங்களாக யாழ் குடா நாட்டின் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதமானதை அடுத்து நீதிமன்றங்கள் இயங்கவில்லை என்பது தெரிந்ததே.

புதிய நடமுறையின் பிரகாரம் பின்னர் வழக்குகளை தொடருவதற்கு வசதியாக சந்தேக நபர்கள் பிணையில் வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

சந்தே நபர்கள் நீதிவானல் குறிக்கப்படும் நாட்களில் யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவுக்குச் சென்று கைெழுத்திட வேண்டும்.

குற்றமானவை எனக் கருதப்படும் செயல்களைச் செய்வோரை இந்திய அமைதிப்படையினர் கைது செய்து பொலீஸாரிடம் ஒப்படைக்கின்ற போதிலும் நீதிமன்றம், சிறைச்சாலைகள் இயங்காமையினாலும் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க முடியவில்லை.

இதன் காரணமாகவே இப்புதிய நடைமுறை அமுல்படுத்தப்படுவதாக பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஒ-5-10]

பல்கலைக்கழக

# மாணவர்களின் கோஷ்டி மோதலைத் தவிர்க்க முயற்சி

யாழ்ப்பாணம் ஜூன் 3

யாழ் பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்றுக்கும் பேராதனை பல்கலைக்கழகமாணவர் குழு ஒன்றுக்கும் இடையில் கோஷ்டி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இம் மோதல்களுக்குக் காரணம் ''ராகிங்'' என்று கூறப்படுகின்றது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது.-

கடந்த மாதம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பமாகியதைத்தொடர்ந்து புதிய மாணவ, மாணவிகள் வந்தனர்.

அதேவேளை பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பதால் இங்கு வீடுகளில் தங்கியுள்ளனர்

அப்படித் தங்கியிருக்கும் மாணவர்களில் ஒரு சிலர், யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்று வேளை, புதிய மாணவ, மாணவிகளை ''ராகிங்'' செய்ய முற்பட்டனர் என்று சொல்லப்படுகிறது.

அப்போது யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

தகராறு கைகலப்பாக மாறியது இதில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒருவர் காயத்துக்குள்ளானார் என அறியவந்தது.

இதனைத் தொடர்ந்து இப்பிரச்சினை கோஷ்டி மோதலாக உருவெடுத்தது.

இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு மேலும் மோதல் நடவாது தவிர்ப்பதற்கு மாணவர் குழு ஒன்று தற்பொழுது முயற்சி மேற்கொண்டிருக்கிறது எனவும் அறியப்படுகிறது.

[ஒ 5]

நயினாதீவு உற்சவம்

# வீதிகளைத் திருத்த ரூ. ஒரு லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் ஜூன் 3

எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நயினாதீவு உற்சவத்தை முன்னிட்டு நயினாதீவுப் பகுதியில் குறிப்பிட்ட சில வீதிகளை திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் வீதித் திருத்தத்திற்கென ஒரு லட்சம் ரூபாவை யாழ் அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் ஒதுக்கியுள்ளார்.

இந்தப் பணம் பெருந்தெருக்கள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. உடனடியாக வேலைகளை ஆரம்பிக்கவும் பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெடுந்தீவுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டுத் தற்பொழுது பழுதடைந்த நிலையில் உள்ள குமுதினி, அலையரசி ஆகிய இரண்டுபடகுகளை திருத்தி சேவையில் ஈடுபடுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-9)

**நிர்மாண...:**

[5ம் பக்கத் தொடர்ச்சி]

விபரங்களை, பெற விரும்புவோர் தேசிய தொழிற் பரீட்சை அதிகாரி திரு. ம சிவயோகசுந்தரத்தை நாளை நான்காம் திகதிக்கு முன்னர் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் சந்தித்துப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ-10]

**ஈழந்துப்...**

[1 ம பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதேவேளை ஈழ விடுதலை இயக்கங்களைச் சேர்ந்த போராளிகள் பலர் இலங்கைக் [illegible] வும் சொல்லப்படுகிறது.

(அ-ஏ)

**வாக்களிப்பு...**

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வாக்குப் பெட்டியுடன் தப்பிச் சென்றுவிட்டனர் என்று அறியப்படுகின்றது.

**தாக்கு**

குண்டசாலையில் வாக்களிப்பு நிலையம் ஒன்றில் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த அரச ஊழியர் மீது இனந்தெரியாதோர் சுட்டனர்.

மூன்று ஊழியர் காயம் அடைந்தனர். அவர்களுக்குப் பதில் புதியவர்கள் நியமிக்கப்பட்டனர் அதன் பின்னர் உரிய நேரத்தில் வாக்களிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

வேறு பகுதிகளில் 3 வாக்களிப்பு நிலையங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வாக்களிக்க வருபவர்களில் முதலில்வரும் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்படுவர் என்று மக்கள் விடுதலை முன்னணி எச்சரித்திருந்தது.

**தீக்கிரை**

நாகொல்லாகம ரயில் நிலையம் நேற்று இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது என்று அறிவிக்கப்படுகின்றது.

அங்கிருந்த வாக்களிப்பு நிலையம் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் ஒரு பொலீஸ்காரர் கொல்லப்பட்டார். வேறு 3 பொலீஸ்காரர் படுகாயமடைந்தனர்.

பொலீஸார் மீது அக்கோஷ்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

**கண்டியில் குண்டு**

கண்டி நகரில் நேற்று குண்டு ஒன்று வெடித்தது. சேத விபரங்கள் தெரியவில்லை. (அ-ஏ)

**சோதனை**

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் பரதான வீதிப் பகுதியில் நேற்று அமைதிப் படையினர் வீதிச் சோதனைகளை மேற்கொண்டனர்.

## வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரப் பகுதியில் நிலவிவரும் பதற்றநிலை காரணமாகத் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

அனுராதபுரப் பகுதியில் சனநாட்டமே இல்லாத நிலையில் மின்சார சபை ஊழியர்கள் திருத்த வேலைகளுக்காக வர தயங்குகிறார்கள்.

இதன் காரணமாகவே இந்தத் திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொள்ள முடியாதுள்ளதால் வடபகுதிக்கு மீண்டும் மின்சார விநியோகம் கிடைக்க இரண்டொரு நாட்கள் செல்லலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

தற்பொழுது சுன்னாகம் மின் நிலையத்திலிருந்து யாழ். பஸ்நிலையப் பகுதிக்கும், போதனா வைத்தியசாலைக்கும் ஜெனரேட்டர்கள் மூலமே மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-ஈ-9)


## ★ LONDON EXAMS ★

[ Nov. Dec. 88 ]
WEEKEND CLASS
ஆரம்பம் : 8.6.88 காலை 9.00

I C. M A — C I. M A.
Stage I & II
A A. T — Prelim. & Inter.

விரிவுரையாளர் குழு:

V. கருணாநிதி, S. P. சிவஞானம்,
S. சிவபாலன், S. பிலிப்,
Mrs S. மூர்த்தி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்.

இது விளம்பரமல்ல!
அப்படியாயின் விளம்பரம் யாது???
எமது மாணவர்களின் கடந்த காலப் பரீட்சைப் பெறுபேறுகள் மாத்திரமே

GOOD WINE NEEDS NO BUSH

**RAPID RESULTS INSTITUTE**

212, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[3449]



## உடனடிவேலைவாய்ப்பு

**Kuwait Cleaners - 35K. D.**
2½ மாதங்கள் ஆகும்
உடன்படிக்கை 2 வருடங்கள்

## Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1 | Cleaners (Hospital, Schools, Airport) | - 300 - 350 | Riyals |
| 2 | Masons | - 550 | Riyals |
| 3 | Carpenters | - 550 | ,, |
| 4 | Plumbers | - 550 | ,, |
| 5 | Electricians | - 550 | ,, |
| 6 | Heavy Vehicle Drivers | 700 | ,, |
| 7 | Heavy Mechanics | - 650 | |
| 8 | A/C Mechanics OPEN VISA | | |
| 9 | Sign Board Painter - 1 | - 800 | ,, |
| 10 | Audio Video Technician - 1 | - 800 | ,, |

★ உடன்படிக்கை 3 வருடங்கள்
★ இலவச உணவும் தங்குமிடமும் அல்லது 100 Riyals அலவுன்ஸ் உணவுக்கு
★ இலவச மருத்துவ சிகிச்சை

Cleaners க்கு இருகிழமையில் பயணம். அதாவது 15-06-88 க்கு முன் பயணம் செய்யலாம் ஆதலால் முற்பணம் அவசியம்

Passport வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

நிபந்தனை:- விசா பெற்றுக் கொடுத்த பின், குறிக்கப்பட்ட காலத்தில் பணத்தைச் செலுத்தி வெளிநாடு செல்லத் தவறினல் முற்பணமோ கடவுச்சீட்டோ நீங்கள் திரும்பப் பெறமுடியாது செல்ல முடியும் என்றால் வாருங்கள் அல்லது வந்து நேரத்தை வீணாக்காதீர்கள் நம்பிக்கை இருந்தால் வாருங்கள்

காலை 7 மணி தொடக்கம் பி ப. 1 மணி வரை

**M. Shannmugaratnam**
(யாழ் கல்லூரியின் பழைய மாணவன்)
Ex S. I of Police
Sivankovillady, SITHERNKERNY [N P]

அல்லது பின்வருவோருடன் தொடர்பு கொள்க:-

1. **V. கனகலிங்கம்**
7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

2. **அமிர்தலிங்கம் மாஸ்டர்**
சில்க் மகான், சண்டிலிப்பாய்

3. **சிறீ (Honda)**
183, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

4. **றோபிட் [ஜோர்ச்]**
ராஜா வெல்டிங் வேர்க்ஸ், சங்கானை றோட், அச்சுவேலி

இவர்களுடனே பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம்

[4029]



## அறிவித்தல்
## மின் விநியோகம் தடை

1988ஆம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை 132 கே. வி. மின்மார்க்கத்தில் அவசர திருத்த நிர்மாண வேலைகளுக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் [ஆனையிறவு, பரந்தன், ஒட்டுசுட்டான் நெடுங்கேணி, மாங்குளம், துணுக்காய், மல்லாவி] மின்விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மின் பொறியியலாளர்
கிளிநொச்சி பிரதேச அலுவலகம்
இலங்கை மின்சார சபை
மாங்குளம்.

(5275)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
29 - 5 - 1964

இறப்பு:
3 - 6 - 1986

**திருநாவுக்கரசு பிரதீபன் [தீபன்]**

கன்னித் தமிழ் காக்க காத்திருந்த சந்திரனே
எம்மையெல்லாம் தவிக்க விட்டு
எங்கு நீர் சென்றீரோ
அன்புக்குள் திணற வைக்கும் அழகே
நீ ஏன் மறைந்தாய்
பிறந்த மண்ணும் நடந்த பாதையும்
கலந்து வளர்ந்து பழகிய சுற்றமும்
கலங்கிக் கதறி நிலைகுலைந்து போனதே.
கதிரவனாய் நின்று சுடரென நீ மறைந்தாய்
எக்காலமும் உனது இணையற்ற வீரத்தை
முக்காலத்தென்றும் இலக்கியங்கள்
முழங்கட்டும்
காலங்கள் சாகவில்லை, உன் கடமையும்
சாகவில்லை
டாரினில் நின் புகழ் என்றும் திகழ்கவே

உன் பிரிவினில் வாடும்:
அப்பா, அம்மா, அம்மம்மா,
சின்னம்மா, உற்றார், உறவினர்,
சகோதரர்கள், நண்பர்கள்.

சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

(C 5303)



## மரண அறிவித்தல்

**பொ. இராஜேந்திரம்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

வண்ணார்பண்ணை ஓடைலேனைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் பொன்னுச்சாமி இராஜேந்திரம் 2.6.88 அன்று காலமானார். இவர் யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கைதடி மகாவித்தியாலத்திலும் கடமையாற்றியவருமாவார். இவர் காலஞ்சென்ற கு. பொன்னுச்சாமி, [Proctor & Notary Public] திருமதி நாகேஸ்வரி பொன்னுச்சாமியின் மகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் நாகபூசணி, இராஜகுலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரது பூதவுடல் 3-6-88 இன்று காலை 10 மணிக்கு கு.கருணாகரன் அவர்களது இல்லத்தில் ஈமச்சடங்குகள் நடைபெற்று பின் தகனக் கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அறிவிப்பவர்
மைத்துனர்
வே. ஜெயரட்ணம்

(4048)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 3-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday, 3 rd June 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org